நான்கே மாதத்தில் நாறிப்போன ஆட்சி!

தாராபுரம் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை...

5-ஆம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாட்டில் இதற்கு முன்னால் இப்படி ஒரு இடைத்தேர்தல் வந்திருக்கிறதா? இல்லை. ஆணவத்தின் உச்சத்திலிருந்து தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் கொச்சைப்படுத்தும் முதலமைச்சர் விஜய்க்கு, தாராபுரம் மக்களாகிய நீங்கள் கொடுக்கப்போகும் அடி மறக்க முடியாத பாடமாக - மரண அடியாக இருக்க வேண்டும்! இல்லையென்றால், தமிழ்நாடு முழுவதும் இதுவே வேலையாக இறங்கிவிடுவார்கள். அதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

போலி பிம்பம் காட்டி ஏமாற்றும் விஜய்க்கான எதிர்ப்பு!

இப்போதே எந்த அமைச்சரும் எந்த வேலையும் செய்யவில்லை; அவர்களுடைய துறையைக் கூட கவனிக்கவில்லை; எந்தத் துறையென்று அவர்களுக்கே தெரியாது. மின்சாரம் இல்லை, பால் கிடைக்கவில்லை, ரேஷன் கடையில் பாமாயில் கிடைக்கவில்லை என்று மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் — அமைச்சர்கள் எல்லாம் இடைத்தேர்தல் நடக்கும் தொகுதிகளில் 'டேரா' போட்டு உட்கார்ந்திருக்கிறார்கள். அரசாங்கம் செயல்படாமல் இருக்கிறது. இதெல்லாம் தெரிந்த தால்தான், துரோகத்தின் உருவமாக வரும் ஆளுங்கட்சி வேட்பாளருக்கு மக்களான நீங்கள் தரமான வரவேற்பு தந்து விரட்டியடிக்கிறீர்கள்... பல ஊர்களில் ஆளுங்கட்சியினரால் நுழை யக் கூட முடிய வில்லை... இதை தொலைக்காட்சியில், பத்திரிகைகளில் பார்க்கிறோம். இது, ஆளுங்கட்சி வேட்பாளர் மற்றும் அமைச்சர்களுக்கான எதிர்ப்பு மட்டும் கிடையாது; போலி பிம்பத்தைக் காட்டி ஏமாற்றும் முதலமைச்சர் விஜய்க்கான எதிர்ப்பு! அதை மறந்து விடக் கூடாது.

பொதுவாக, ஓர் ஆட்சியின் முதல் ஆறு மாதத்தை "ஹனிமூன் பீரியட்" என்று சொல்வார்கள். ஆனால், நான்கே மாதத்தில் நாறிப்போனது, இந்த ஆட்சி. த.வெ.க.விற்கு வாக்களிக்காத மக்கள் மட்டுமில்லை, அவர்களுக்கு வாக்களித்த மக்களுமே இப்போது நாள்தோறும் புலம்பும் நிலைக்கு வந்துவிட்டார்கள்... உள்ளூரில் பெயர் ரிப்பேர் என்று தெரிந்ததும் இவர்கள் என்ன பண்ணினார்கள் தெரியுமா? கோடிக்கணக்கில் காசு கொடுத்து, பக்கத்து மாநிலங்கள் மற்றும் வட மாநிலங்களில் எல்லாம் "டல்பதி விஜயின் சாதனைகள்" என்று அந்தந்த மாநில மொழிகளில் பொய்ச் செய்திகளைப் பரப்ப ஆரம்பித்துவிட்டார்கள். டிசைன் டிசைனாகப் பொய்ச்செய்தி! பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க தமிழ்நாட்டில் எல்லாத் தெருவிலும் முதலமைச்சர் ட்ரோன் மூலமாகக் கண்காணிக்கிறாராம். யோசித்துப் பாருங்கள்... இதெல்லாம் பொய் என்று தெரிந்தவர்கள் தமிழ்நாட்டை எவ்வளவு கேவலமாக நினைப்பார்கள்! இதெல்லாம் ஏன் செய்கிறார்கள் தெரியுமா? நான்கு மாதத்தில் சாதனை என்று சொல்ல என்ன இருக்கிறது? மின்வெட்டா? அரிவாள் வெட்டா? சிறுமிகள் முதல் மூதாட்டிகள் வரை பாலியல் கொடுமைக்கு ஆளாவதைச் சொல்வதா? அரிசி விலை உயர்வா? ஷாக் அடிக்கும் மின்சாரக் கட்டணத்தைப் பற்றிச் சொல்வதா? கடன் தள்ளுபடி என்று சொல்லி விவசாயிகளை ஏமாற்றியதைச் சொல்வதா? அதனால்தான் எல்லாமே ரீல்ஸ்!

> "தலைமைத் தேர்தல் அதிகாரி விவகாரத்தில் வாயைத் திறக்க மறுப்பது ஏன்?"

'ரீல்ஸ்' முதல்வருக்கு, ஊடகம் என்றாலே பயம்!

சினிமாவில் நடிப்பதை நிறுத்திவிட்டு, முதலமைச்சர் இப்போது மக்கள் முன்னால் நடித்துக் கொண்டிருக்கிறார். இப்போது லேட்டஸ்டாகப் பிரச்சாரத்தில் கூட இருப்ப வர்களையும் ஆர்ட்டிஸ்ட் டாக மாற்றிக் கொண்டிருக்கிறார். தாராபுரத்தில் அந்த நாடகத்தை எல்லாம் பார்த்தோம். "நீங்கள் அழாதீர்கள்! உங்களுக்கு வாக்களித்ததால் நாங்கள்தான் அழ வேண்டும்" என்று இப்போது மக்கள் சொல்கிறார்கள். பிரச்சார மேடையில் மைக் கிடைத்தால் போதும் என்று மனப்பாடம் செய்த வசனங்களைக் கத்துகிறார்! அவர் பேசுவதே கிடையாது, எல்லாவற்றுக்கும் கத்துவதுதான். அது சட்டமன்றமாக இருந்தாலும் சரி, தெருவாக இருந்தாலும் சரி, எங்கும் கத்துவதுதான். ஆனால், ஊடகங்களின் மைக்கைப் பார்த்தால் மட்டும் அவருக்கு அலர்ஜி! மேடையில் அவ்வாறு கத்துகிறீர்களே, சட்டமன்றத்தில் அவ்வாறு கத்துகிறீர்களே, மீடியா மைக்கைப் பார்த்து கொஞ்சம் பேசவாவது கூடாதா! அவருக்கு அலர்ஜி. அவரிடம் மேட்டூரில் கூலிங் கிளாஸ் வாங்கிய பாட்டி, அவர் காலை உணவு பரிமாறிய சிறுமி, இவர்கள் கூட தைரியமாக ஊடகங்களுக்குப் பேட்டி கொடுக்கிறார்கள்; கேள்வி களுக்குப் பதில் சொல்கிறார்கள். ஆனால், இந்த ரீல்ஸ் முதலமைச்சர் ஊடகம் என்று சொன்னாலே பயப்படுகிறார்.

பா.ஜ.க. என்றால் அவ்வளவு பயமா சி.எம்.சார்?

இந்த லட்சணத்தில் இவர் என்னைப் பார்த்து, "வாயைத் திறங்கள் ஸ்டாலின் சார்" என்று காட்டுக் கத்தல் கத்துகிறார். நானும் கத்துகிறேன், சி.எம். சார்! ப்ரோ, சி.எம். சார்! நான் எல்லாவற் றிற்கும் பேசிக்கொண்டுதான் இருக்கிறேன். தலைமைத் தேர்தல் ஆணையர் விவகாரத்தில் ஏன் சார் பேசமாட்டேன் என்கிறீர்கள்? இதை நான் கேட்கவில்லை. உங்களுக்கு ஆதரவு கொடுத்த கட்சிகளே கேட்கிறார்கள் சார்... சி.எம். சார் என்ன பயம்? இந்தியா முழுவதும் எல்லாத் தலைவர்களும் பேசிக்கொண்டிருக்கும் விஷயத்தில் கூட, உங்களால் வாயைத் திறக்க முடியவில்லையே, என்ன காரணம் சி.எம். சார்... பா.ஜ.க. என்றால் அவ்வளவு பயமா சி.எம். சார்? இங்கே தாராபுரத்தில் பிரச்சாரத்திற்கு வந்தபோது அவரே ஒரு உண்மையையும் சொல்லிவிட்டார்! த.வெ.க. பா.ஜ.க.வின் கிளைதான் என்று ஒத்துக்கொண்டார்! அந்த உண்மையைச் சொன்னதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்!

தமிழ்நாட்டை 'அம்பேல்' ஆக்கத்திட்டமிடும் கார்ப்பரேட் மாஃபியா கும்பல்!

மக்கள் பிரச்சினைகளை விவாதிக்க வேண்டிய சட்டமன்றத்தின் மாண்பையும் இந்த முதலமைச்சர் கெடுத்துவிட்டார். கண்ட கண்ட சைகைகளைக் காட்டி, நான் மிசா சிறைவாசத்தில் சந்தித்த கொடுமைகளைக் கிண்டல் செய்யும் இடமாகச் சட்டமன்றத்தை மாற்றியிருக்கிறார். மக்கள் "மாண்புமிகு முதலமைச்சர்" என்று கூப்பிடும் தரா தரத்தோடு அவர் நடந்துகொள்ள வேண்டும். சுருக்கமாகச் சொல்கிறேன், Chief Ministerஆக நடந்து கொள்ளுங்கள்; Cheap Ministerஆக நடந்துகொள்ளாதீர்கள். நீங்கள் நடத்தும் த.வெ.க. என்பது ஒரு அரசியல் கட்சியே இல்லை... அது ஒரு கார்ப்பரேட் மாஃபியா... அதில் 'இன்வெஸ்டிங் பார்ட்னர்', 'வொர்க்கிங் பார்ட்னர்', 'ஸ்லீப்பிங் பார்ட்னர்', 'சீக்ரெட் பார்ட்னர்' என்று பெரிய கும்பலே இருக்கிறது... அந்த பார்ட்னர் எல்லாம் யார் என்று உங்களுக்கும் தெரியும். தமிழ்நாட்டை அம்பேல் ஆக்க வேண்டும் என்பதுதான் அந்த கார்ப்பரேட் மாஃபியா கும்பலின் இலக்கு!

த.வெ.க. ஆட்சி அமைந்த இந்த நான்கு மாதத்தில் நாட்டில் நடப்பது என்ன? பயிர்க்கடன் தள்ளுபடி செய்யாத தால் விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்! மீனவர்கள் வாழும் பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டப்போவதால் மீனவர்கள் போராட்டம்! மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு அனுமதிச்சீட்டுகள் எல்லாவற்றையும் பழக்கதோஷத்தில் கறுப்புச் சந்தையில் விற்றதால் பக்தர்கள் போராட்டம்! வாரக் கடைசியில் ஊருக்குப் போகப் பேருந்துகள் இல்லாமல் பயணிகள் போராட்டம்! தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்! செவிலியர்கள் போராட்டம்! மின்வாரிய ஊழியர்கள் போராட்டம்! ஆவின் பால் கிடைக்காமல் போராட்டம்! இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்த மாதிரி, முதலமைச்சர் தொகுதி தொடங்கி அனைத்துத் தொகுதிகளிலும் மின்வெட்டுக்கு எதிராகப் போராட்டம்! ஏழு மணி நேரம் மின்சாரம் இல்லை; எட்டு மணி நேரம் மின்சாரம் இல்லை. வீட்டை விட்டுவிட்டு மக்கள் எல்லாம் இரவில் சாலையில் நின்று சாலை மறியல் செய்கிறார்கள். இப்படி, மக்களின் நிம்மதியைக் கெடுத்து அலைய விட்டுவிட்டு, முதலமைச்சர் மட்டும் பண்ணையார் மாதிரி பட்டு வேட்டி சட்டையில் பந்தா பண்ணிக்கொண்டிருக்கிறார். ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு டிரஸ், ஜோசியர் சொல்லி இருக்கிறார். வெள்ளிக் கிழமை என்றால் பட்டு வேஷ்டி.

விலைவாசி எல்லாமே தாறுமாறாக ஏறிவிட்டது!

தமிழ்நாட்டு விவசாயிகளின் உயிர்ப்பிரச்சினையான காவிரி விவகாரத்தில்கூட, கர்நாடகத்திற்கு எதிர்ப்புத் தெரி விக்காமல் மௌனமாக இருக்கிறார். கர்நாடகத்தின் செயலுக்குக் கூட எதிர்ப்புத் தெரிவிக்க உங்களுக்கு என்ன பயம்? என்ன தயக்கம்? மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் வறட்சிப் பாதிப்பை அரசு அங்கீகரித்துச் சிறப்பு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். குறுவை சிறப்புத் தொகுப்பிற்கும் வறட்சி நிவாரணத்திற்கும் வித்தியாசம் தெரியாத முதலமைச்சர், இதையெல்லாம் நாளிதழ்களைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். படித்த பிறகாவது விவசாயிகளுக்கு ஏதாவது செய்யுங்கள்! அடுத்து, 200 யூனிட் மின் சாரம் இலவசம் என்று சொன்னார். இப்போது உங்கள் மின்சாரக் கட்டணம் குறைந்திருக்கிறதா? ஏறியிருக்கிறதா? பெரும்பாலான இடத்தில் ஏறியிருக்கிறது. அதுமட்டுமா? விலைவாசி எல்லாமே தாறுமாறாக ஏறிவிட்டது. தேர்தலுக்கு முன்னால் என்ன விலை? இன்றைக்கு என்ன விலை?

இன்று காலையில், தாராபுரம் நகரத்தில் நான் சாலைவலம் சென்றேன். அப்போது ஒரு மளிகைக் கடையில் போய் கேட்டேன். "அரிசி, சர்க்கரை, எண்ணெய், காய்கறிகள் எல்லா விலையும் என்ன?" என்று கேட்டேன். கன்னாபின்னாவென ஏறியிருக்கிறது என்று சொன்னார்கள். நான்கு மாதங்களுக்கு முன்னால் அரிசி, சர்க்கரை, மளிகைப் பொருள், காய்கறி விலை என்ன? இப்போது விலை என்ன? முதலமைச்சருக்கு இதெல்லாம் தெரியுமா? விலைவாசியைக் கட்டுப்படுத்த ஆய்வுக் கூட்டம் நடத்துவார் என்று பார்த்தால், வெளிநாட்டிற்குப் படப்பிடிப்பிற்குப் புறப்பட்டு விட்டார்.

ஒரு பக்கம் விலை உயர்வு! மறுபக்கம் கொலை உயர்வு!

இப்போது தமிழ்நாட்டில் என்ன உயர்வு தெரியுமா? ஒரு பக்கம் விலை உயர்வு! மறுபக்கம் கொலை உயர்வு! அதுவும் செய்தியைப் பார்த்தாலே, ஒரே நாளில் ஐந்து கொலை, எட்டு கொலை என்று கொத்துக் கொத்தாகத்தான் கொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன! போதைப்பொருள் பற்றி காவல்துறையினருக்குத் தகவல் கொடுத்தால், தகவல் கொடுத்தவர்கள்தான் கொல்லப்படுகிறார்கள்; போதைப் பொருளை வைத்திருப்பவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை.

கடந்த சில மாதங்களில் இருநூற்றுக்கும் மேற்பட்ட கொலைகள், முன்னூறுக்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், ஏராளமான காவல் மரணங்கள், ஆணவக் கொலைகள் என வரலாறு காணாத வேகத்தில் சட்டம்ஒழுங்கு சீர்கெட்டுப் போய் இருக்கிறது. உண்மையிலேயே நல்லாட்சி நடந்தால் தானே" நடப்பது எங்கள் ஆட்சி" என்று மக்கள் பெருமையாகச் சொல்ல வேண்டும்? ஆனால், இப்போது யார் அப்படிப் பெருமையாகச் சொல்கிறார்கள் தெரியுமா? குற்றவாளிகள் தான் கெத்தாக "இது எங்கள் ஆட்சி" என்று சொல்லிக் கொண்டு சுற்றுகிறார்கள். அந்த அளவுக்குத்தான் சட்டம்ஒழுங்கு இருக்கிறது.

சிங்கப்பெண் அதிரடிப்படை எல்லாம் எங்கே போயிற்று? கடந்த காலங்களில் நடந்ததை விடப் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் இப்போது தான் பல மடங்கு அதிகரித்திருக்கிறது. இதைப் பற்றி யெல்லாம் காவல்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச் சருக்குத் துளிகூடக் கவலையே இல்லை... சட்டம்ஒழுங்கு பற்றிக் கேள்வி கேட்டால் பதில் சொல்லும் பொறுப்பைக் கூட மற்ற அமைச்சர்களிடம் கொடுத்து விட்டார்.

ஆட்சி என்றால் என்னவென்றே தெரியாத கூட்டத்திடம் தமிழ் நாடு சிக்கிச் சீரழிகிறது!

அரசுப் பதவியில் ஜோசியர் நியமனம், கம்யூனிஸ்ட் கட்சிகளைக் குறிவைத்து அரசாணை, சொத்துவரி உயர்வு, சட்டம்ஒழுங்கு தகவல்களைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் தராமல் இருக்க அரசாணை, மாநில நெடுஞ்சாலை களில் இந்தி பெயர்ப் பலகைகள் என்று பல விஷயங்களை அறிவித்துவிட்டு UTurn அடிக்கிறார். இதனால் என்ன நடக்கிறது தெரியுமா? நமக்கு வர வேண்டிய முதலீடுகள் எல்லாம் ஆந்திராவிற்குத் UTurn அடிக்கின்றன. ஆட்சி என்றால் என்னவென்றே தெரியாத ஒரு கூட்டத்திடம் தமிழ்நாடு சிக்கிச் சீரழிகிறது. இதுவே, நம்முடைய கழக ஆட்சி அமைந்த போதெல்லாம் மக்களின் தேவை என்ன வென்று தெரிந்துகொண்டு திட்டங்களைத் தீட்டினோம்.

தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த போது தான் கொங்கு வேளாள மக்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து, அவர்களுடைய பொருளாதார - கல்வி உரிமையை உறுதி செய்தார். அதே போல அருந்ததியர் இன மக்களுக்கு உள்ஒதுக்கீடு கொடுத்து உயர்வு கொடுத்தது, கலைஞருடைய ஆட்சி. சிறுபான்மைச் சமுதாய மக்களான இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்து அவர்களின் வாழ்வில் ஒளியேற்றியதும் தலைவர் கலைஞருடைய ஆட்சி தான்.

கண்ணன் நகர் பகுதி உழவர் சந்தை, கொளத்துப் பாளையம் கூட்டுறவு நூற்பாலை வளாகத்தில் 'சிப்காட்' தொழிற்பேட்டை, பழனி தாராபுரம் சாலை நான்கு வழிச்சாலையாக விரிவாக்கம் எனப் பல சாதனைகள் கழக ஆட்சியில் செய்யப் பட்டன.

பண்ணையார் மாதிரி பட்டு வேட்டி சட்டையில் பந்தா பண்ணும் முதல்வர்!

கடந்த ஐந்து வருடத்தில் என்னுடைய தலைமை யிலான திராவிட மாடல் ஆட்சியில் ஒவ்வொரு குடும்ப மும் பயனடைகிற வகையில் திட்டங்களைச் செய்தோம். பெருமையாகச் சொல்கிறேன், இந்தத் தாராபுரத்தில் மட்டுமே, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் 55,745 பேர் மாதம் 1000 ரூபாய் இன்றைக்கு வரைக்கும் கொடுக்கப் படு கிறது என்றால், அது யாருடைய ஆட்சி? இந்த அடியேன் உங்கள் ஸ்டாலினுடைய ஆட்சி! இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், முதன்முதலில் கட்டணமில்லாத பேருந்துப் பயணத்தை ஆட்சிக்கு வந்த முதல் நாளிலேயே தொடங்கி வைத்தவன்தான் இந்த ஸ்டாலின்! அது மட்டுமா, படிக்கிற மாணவர்களுக்குப் பணம் தடையாக இருக்கக் கூடாது என்று புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டம் கொண்டுவந்து மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்த கரம் தான், இந்த ஸ்டாலினின் கரம். கலைஞர் வீடு வழங்கும் திட்டம், தோழி விடுதி, மக்களைத் தேடி மருத்துவம் என்று சொல்லிக் கொண்டே இருந்தால், இந்த ஒரு நாள் போதாது!

இந்தத் தாராபுரம் பகுதி தொழில் வளர்ச்சிக்காக மட்டும், 87 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். 24 கோடி ரூபாயில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், புதிய பேருந்து நிலையம், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம், அரசு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் குடிநீர் வசதிகள், ஜவுளிக் கடை மற்றும் பூக்கடை கார்னர் பகுதிகளில் மழை நீர் வடிகால் வசதிகள், புதிய சாலைகள், நல்லதங்காள் ஓடையில் பொன்னிவாடி கிராமத்தில் புதிய நீர்த்தேக்கம் அமைக்கிறது, அணைக்குக் கீழ்ப்புறம் புதிய உயர்மட்டப் பாலம் அமைக்க நிதி ஒதுக்கீடு என என்னால் சொல்லிக் கொண்டே இருக்க முடியும்.

த.வெ.க.ஆட்சியில் புதிய விதமான ஊழலை உருவாக்கும் வேலைகள்!

த.வெ.க. ஆட்சிக்கு வந்த 5 மாதத்தில் கொண்டு வந்திருக்கும் திட்டங்கள் எல்லாம் என்ன? வெற்றி மின்வெட்டுத் திட்டம், வெற்றி அரிவாள் வெட்டுத் திட்டம், வெற்றி விலைவாசி உயர்வுத் திட்டம், வெற்றி டெங்கு காய்ச்சல் திட்டம் - இப்படித்தான் இருக்கும்! ஆறு மணிநேரத்தில் டெண்டரையே முடிப்பது... டெண்டர் விடுவதற்கு முன்னாடியே நாமக்கல் கவிஞர் மாளிகையில் பணிகள் நடப்பது, மேட்டூர் அணையைத் திறக்க வரும்போது 5 கோடி ரூபாயில் சாலை ஓரம் தடுப்புகள் அமைப்பது எனப் புதிய விதமான ஊழலை உருவாக்கும் வேலைகள்தான் த.வெ.க. ஆட்சியில் நடக்கிறது.

தப்பித்தவறி, அது நடக்கப் போவதில்லை. தப்பித்தவறி, இந்த இடைத்தேர்தலில் ஆளுங்கட்சி வெற்றி பெற்றால்- உங்கள் மின்கட்டணம் உயரும், பால் விலை உயரும், பேருந்துக் கட்டணம் உயரும், பத்திரப்பதிவுக் கட்டணம் உயரும், வரிகள் உயரும். அதனால்தான் சொல்கிறேன், இந்த இடைத்தேர்தலில் சரியான அடி கொடுத்தால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் ஷாப்பிங்கை நிறுத்திவிட்டு, ஆட்சியில் கொஞ்சமாவது கவனம் செலுத்துவார்கள். அதனால், இந்த இடைத்தேர்தல் தாராபுரம் தொகுதிக்குரியது மட்டும் அல்ல; ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டையும் காப்பாற்றும் பொறுப்பும் இந்த தாராபுரம் பகுதியில் இருக்கும் உங்களிடம்தான் இருக்கிறது.

முதல்வர் விஜய்யின் ஆணவத்தை அடக்க எழுதப்படும் தீர்ப்பு!


இதே கொங்கு நாட்டில் வாழ்ந்த வீரர் தீரன் சின்னமலை! அந்த மாவீரனுக்குத் தளபதியாக இருந்தவர்தான் பொல்லான். அந்த இரண்டு பேரும் சேர்ந்து ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடினார்கள். ஆனால், துரோகம்தான் மாவீரன் தீரன் சின்னமலையின் உயிரைப் பறித்தது. அதே துரோகம்தான் தாராபுரம் தொகுதியில் இப்போது இடைத்தேர்தலையும் திணித்திருக்கிறது; ஜனநாயகத்தைச் சாகடித்திருக்கிறது. இந்த இடைத்தேர்தல், தாராபுரம் மக்களான உங்களுடைய வாக்குகளின் கண்ணியத்திற்கு முதலமைச்சர் விட்டிருக்கும் சவால்! இந்த ஆணவத்தை அடக்க நீங்கள் தீர்ப்பெழுதப் போகும் நாள்தான் — அக்டோபர் 6.

"நம் ஒரு வாக்கால் என்ன ஆகிவிடும்?" என்று ஒருவரும் நினைக்காதீர்கள்! "குழந்தைகள் சொல்லி விட்டார்கள்; அவர்களுக்காக ஒரு வாக்கை மாற்றிப் போடுவோம்" என்று நினைக் காதீர்கள். அந்தக் குழந்தைகளின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்து, உதயசூரியனுக்கு வாக்களியுங்கள். இந்தத் த.வெ.க.வுக்கு நீங்கள் தப்பித்தவறி வாக்களித் தால்கூட, தமிழ்நாடு முழுவதும் திரும்பத் திரும்ப இடைத்தேர்தலை வரவைக்கப் பார்ப்பார்கள். அதற்கு நாம் இடம் கொடுத்துவிடக் கூடாது.

ஜனநாயகம் காக்க - உங்கள் கண்ணியம் காக்க - தமிழ்நாட்டைக் காக்க-முக்கியமாக, தாராபுரம் மக்கள் உங்கள் தன்மானத்தைக் காக்க - நமது வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யா அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்! குதிரைபேர த.வெ.க. ஆட்சியின் ஆணவத்திற்கு முடிவு கட்ட நீங்கள் தயாரா? ஆணவ ஆட்சிக்கு முடிவு கட்டத் தயாரா? அக்கிரம ஆட்சிக்கு முடிவு கட்டத் தயாரா? அதற்கு நீங்கள் மறக்காமல் அக்டோபர் 6, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றினார்.

சினிமாவில் நடிப்பதை நிறுத்திவிட்டு இப்போது மக்கள் முன் நடிக்கிறார்!



தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவுக்கு ஆதரவாக தாராபுரத்தில் எஸ்டிபிஜ கட்சி சார்பில் மாநில பொதுச் செயலாளர் நிஜாம் முகைதீன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர்கள், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா, முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், நெல்லை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர் கே.எம்.முபாரக் அலி உள்பட பலர் கலந்து கொண்டனர்.